**தமிழ்நாடு அரசு**
**சுருக்கம்**

கொத்தடிமைத் தொழிலாளர்கள் விடுவித்தல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் - உயர்மட்ட கண்காணிப்பு குழு தலைமைச் செயலர் தலைமையில் அமைத்தல் மற்றும் மாவட்ட அளவிலானக் குழு அமைத்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந-8) துறை**

அரசாணை (நிலை) எண். 79
நாள் : 17.9.2002

படிக்கப்பட்டது

அரசாணை (நிலை) எண்.122, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், நாள்.20.6.1997

------

ஆணை :

தேசிய அளவில் கொத்தடிமை முறையை நீக்குவதற்காக கொத்தடிமை ஒழிப்புச் சட்டம் 1976 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இம்மாநிலத்தில் இச்சட்டம் 1976-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் கொத்தடிமைத் தனத்தில் சிக்கியுள்ளவர்களையும், வெளி மாநிலங்களில் கொத்தடிமைத் தனத்தில் சிக்கியுள்ளவர்களையும் விடுவிக்கவும் மறுவாழ்வு அளிக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

2. கொத்தடிமைத் தொழிலாளர்களை விடுவித்தல் மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது தொடர்பான திட்டங்களுக்காகும் செலவினம் மைய/மாநில அரசுகளில் 50:50 விகிதாசார அடிப்படையில் ஏற்கப்பட்டு வருகிறது. கொத்தடிமைத் தனத்திலிருந்து விடுவிக்கப்படும் ஒவ்வொரு கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கும் உடனடி நிவாரணத் தொகையாக ரூ.1000/- வழங்கப்படுகிறது. இதன் பின்னர் இவர்களுடைய மறுவாழ்விற்காக கறவைமாடுகள் வழங்குதல், கல் உடைக்கும் தொழில் தொடங்குதல் போன்றவற்றுக்கு ரூ.19,000 (மொத்தம் 1000 + 19,000 = 20,000) வழங்கப்படுகிறது. கொத்தடிமைத் தொழிலாளர்களின் மறுவாழ்வுத் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்த தேவையான அதிகாரங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

3. இம்மாநிலத்திலுள்ள கொத்தடிமைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை கணக்கிடும் பணியை அரசு சாரா தன்னார்வுத் தொண்டு நிறுவனங்களிடம் 1997-இல் ஒப்படை செய்யப்பட்டது. இவர்களுடைய கணக்கெடுப்பின்படி இம்மாநிலத்திலுள்ள கொத்தடிமைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 25,005 ஆகும். இவர்களில் தற்போதைய நிலவரப்படி 13,107 கொத்தடிமைத் தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். கொத்தடிமைத் தொழிலாளர்களை துரிதமாக விடுவிக்கவும், மறுவாழ்வு அளிக்கவும் இப்பொருண்மை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் அலுவல் துறையின் கீழ் வருகிறது. மேலும் இத்திட்டத்தை மேலும் முனைப்புடன் செயல்படுத்த முதுநிலை இந்திய ஆட்சிப்பணி அலுவலர் கொத்தடிமைத் தொழிலாளர்களின் சிறப்பு அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

4. கொத்தடிமை ஒழிப்புச் சட்டத்தை மாவட்டங்களில் திறம்பட நிறைவேற்றிட துணை ஆட்சியர்/வருவாய் கோட்டாட்சியர்களுக்கு தனிப்பட்ட பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதால் மாவட்டங்களில் இப்பணியினை அவர்கள் கண்காணித்து திறம்பட செயல்பட்டு வருகின்றார்கள். இருப்பினும் மாவட்டங்களில் இப்பணியின் முன்னேற்றத்தை தீவிரப்படுத்தும் நோக்கத்தோடு ஒரு புதிய மாவட்டக் குழு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைபட நிறைவேற்றிட துணை ஆட்சியர்/வருவாய் கோட்டாட்சியர்களுக்கு தனிப்பட்ட பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதால் மாவட்டங்களில் இப்பணியினை அவர்கள் கண்காணித்து திறம்பட செயல்பட்டு வருகின்றார்கள். இருப்பினும் மாவட்டங்களில் இப்பணியின் முன்னேற்றத்தை தீவிரப்படுத்தும் நோக்கத்தோடு ஒரு புதிய மாவட்டக் குழு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகவும், அந்தந்த மாவட்டங்களில் உள்ள மாவட்ட வருவாய் அலுவலரை உறுப்பினர்-செயலராகவும் மற்ற கோட்ட வருவாய் அலுவலர்களையும் கோட்ட வளர்ச்சி அலுவலர்களையும் உறுப்பினர்களாகவும் கொண்டதாக அமைக்கப்படுகிறது. இக்குழு மாதம் ஒரு முறை கூடி கொத்தடிமைகள் ஒழிப்புத் திட்டம் குறித்து அதன் முன்னேற்றம் பற்றி விவாதித்து அரசிற்கு அறிக்கை அனுப்பப்படவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது இருப்பினும் மாநில அளவில் இப்பணியினை கண்காணித்து தக்க அறிவுரைகள் வழங்கும் பொருட்டு அரசாணை (நிலை) எண்.122, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், நாள்.20.6.1997 னை ரத்து செய்துவிட்டு ஒரு புதிய உயர்மட்டக் கண்காணிப்புக் குழு தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் கீழ்க்கண்ட உறுப்பினர்களுடன் உடனடியாக நியமனம் செய்யப்படுகிறது :-

1. தலைமைச் செயலாளர் - தலைவர்
2. செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை - உறுப்பினர்
3. செயலர், பொதுத் துறை - உறுப்பினர்
4. செயலர், வருவாய்த் துறை - உறுப்பினர்
5. செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்புத் துறை - உறுப்பினர்
6. செயலர், ஊரக வளர்ச்சித் துறை - உறுப்பினர்

7. செயலர், சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை - உறுப்பினர்
8. செயலர், பள்ளி கல்வித் துறை - உறுப்பினர்
9. செயலர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை - உறுப்பினர்
10. செயலர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை - உறுப்பினர்
11. சிறப்பு அலுவலர், கொத்தடிமை ஒழிப்பு - உறுப்பினர்
12. ஆணையர், ஆதிதிராவிடர் நலம் - உறுப்பினர்செயலர்
13. இயக்குநர், பழங்குடியினர் நலம். - உறுப்பினர்
14. மாவட்ட ஆட்சித் தலைவர் - உறுப்பினர்
(சுழல் முறையில் இரு மாவட்ட ஆட்சித் தலைவர்கள்)
15. சிறப்பு ஒருங்கிணைப்பாளர், - சிறப்பு அழைப்பாளர்
தேசிய மனித உரிமைகள் ஆணையம்,

இக்குழு மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூடி பல்வேறு துறைகளில் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்களின் மூலம் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளித்தல் குறிப்பாக வீட்டுவசதி (தொகுப்பு வீடு திட்டம், ஊரக வளர்ச்சித் துறை) பட்டா நிலம் அளித்தல் (வருவாய்/ஆதிதிராவிடர் நலத் துறை) கறவை மாடு/உழவுமாடு வழங்கல் போன்றவை குறித்து விவாதித்து முடிவு எடுக்கும், மேலும் இக்குழு கீழ்க்கண்ட பணிகளின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு செய்யும் ;-

1) கொத்தடிமைத் தொழிலாளர்களை விடுவித்தல்.
2) விடுவிக்கப்பட்ட தொழிலாளர்கள் ஒன்று சேர்த்து குழு அமைக்கும் பணி.
3) விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரணத் தொகை அளித்தல் அவர்களுக்கு நிரந்தர வருமானம் கிடைக்கும் வகையில் தொழில் செய்ய ஏற்பாடு செய்தல்.
4) விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி வசதி அளித்தல்.
5) விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களின் குடும்பங்களில் ஏற்படும் திருமணம், இறுதிச் சடங்கு மற்றும் மருத்துவச் செலவுகளுக்கு தேவையான சிறு சேமிப்பினை ஏற்படுத்த வழிவகை செய்தல்.
6) தேவையான அடிப்படை மருத்துவ வசதி அளித்தல்.
7) கொத்தடிமையிலிருந்து விடுபட தேவையான விழிப்புணர்வு, பிரச்சாரங்கள் மூலம் ஏற்படுத்துதல்.
8) விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குகு மற்றும் மருத்துவச் செலவுகளுக்கு தேவையான சிறு சேமிப்பினை ஏற்படுத்த வழிவகை செய்தல்.
6) தேவையான அடிப்படை மருத்துவ வசதி அளித்தல்.
7) கொத்தடிமையிலிருந்து விடுபட தேவையான விழிப்புணர்வு, பிரச்சாரங்கள் மூலம் ஏற்படுத்துதல்.
8) விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குத் தேவையான சட்டப் பிரச்சனை சம்பந்தமான உதவிகளையும் சேவைகளையும் அளித்தல்.
9) கொத்தடிமைப்படுத்திய முதலாளிகளின் மேல் சட்டப்படி நடவடிக்கை எடுத்தல்.
10) மறுவாழ்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்.
11) கொத்தடிமைத் தனத்திற்கு திரும்பச் செல்வதை தடுக்க உறுதியான செயல்பாடுகள்.

12) பொதுமக்களின் புகார்களையும், குறைகளையும் கேட்டு அவற்றின் மீது பல நிலைகளில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை அறிதல்.

13) விடப்பட்ட (ஞுசடியீயீநன உயளநள) கொத்தடிமைத் தொழிலாளர்களை மறு ஆய்வு செய்து கொத்தடிமையாக இருப்பவர்களை விடுவித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்.

5. உறுப்பினர் செயலர் அவர்கள் மேற்படி கூட்டத்தினை 3 மாதங்களுக்கு ஒரு முறை கூட்டுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்யவும் கூட்டக் குறிப்புகள் தயார் செய்யவும் வேண்டும் என பணிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. செல்வம்,
அரசு செயலாளர்.

பெறுநர்

தலைமைச் செயலரின், தனிச் செயலர், சென்னை -9.
செயலர், பொதுத் துறை, சென்னை -9.
செயலர், வருவாய்த் துறை, சென்னை -9.
செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை -9.
செயலர், ஊரக வளர்ச்சித் துறை, சென்னை -9.
செயலர், சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, சென்னை -9.
செயலர், பள்ளி கல்வித் துறை, சென்னை -9.
செயலர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, சென்னை -9.
செயலர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, சென்னை-9.
சிறப்பு அலுவலர், கொத்தடிமை ஒழிப்பு, சென்னை -84.
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை -5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை -5.
சிறப்பு ஒருங்கிணைப்பாளர், தேசிய மனித உரிமை ஆணையம், ஹைறதராபாத்,
செயலரின் தனிச் செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை-9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.